# உங்கள் சமையல் பாதுகாப்புக்கான சரிபார்ப்புப் பட்டியல்

## சமையல் செய்வதில் ஏற்படும் தீதான் ப்ராம்ப்ட்டன் நகரில் தீப்பிடிப்பதற்கான #1 காரணமாகும்



### உங்கள் வீட்டில் சமயலறை தீப்பிடித்துவிடாமல் முன்கூட்டியே தடுக்க இந்த சமையல் பாதுகாப்பு குறிப்புக்களை உபயோகியுங்கள்

- ☑ உணவை சமைக்கும்போது, வறுக்கும்போது, கொதிக்க வைக்கும்போது, தீயில் வாட்டும்போது, சூடாக்கும்போது **சமையலறையை விட்டு அகலாதீர்கள்.**
- ☑ உணவை வேக வைக்கும்போது, பேக்கிங் செய்யும்போது, வறுக்கும்போது **வீட்டிலேயே இருங்கள்.** அதனை அவ்வப்போது சோதியுங்கள் மற்றும் நீங்கள் சமைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என நினைவில் கொள்ள ஒரு கடிகாரத்தை உபயோகியுங்கள்
- ☑ சமைக்கும்போது, **எச்சரிக்கையாகவும் கவனம் செலுத்தியபடியும் இருங்கள்.** நீங்கள் எச்சரிக்கையாக இல்லாதபோது, தூக்க கலக்கமாக இருக்கும்போது, மது அருந்திய போது, போதை மருந்து அல்லது சாதாரண மருந்துகள் எடுத்துக்கொண்ட நிலையில் ஒருபோதும் சமைக்காதீர்கள்
- ☑ **தீப்பிடித்து எரியக்கூடிய விஷயங்களை** ஸ்டவ் அடுப்பிலிருந்து தள்ளி வையுங்கள். உதாரணமாக, கரித்துணி, பாத்திரம் பிடிக்கும் சாதனங்கள், துவாலைகள், துணி, சமையல் பாத்திரங்கள், உணவு பொட்டலங்கள் முதலானவை
- ☑ குட்டையான இறுகப் பிடிக்கும் வகையிலான முழுக்கை ஆடையின் கைமடிப்புக்களை இறுக்கமாக சுற்றிக்கொண்டு **தீப்பிடிப்பதை முன்கூட்டியே தடுத்திடுங்கள்.**
- ☑ உபயோகத்தில் இல்லாதபோது சிறிய சமையல் **சாதனங்களை மின்னிணைப்பில் இருந்து துண்டித்து விடுங்கள்.** சுத்தம் செய்து தள்ளி வைக்கும் முன்பாக அத வெப்பம் தணியச் செய்யுங்கள்
- ☑ சமைக்கும்போது, கணப்பு அடுப்பு கையுறைகளை மற்றும் பாத்திரங்கள் மற்றும் வாணலியின் மூடிகளை ஸ்டவ்வுக்கு அருகில் **தயாராக வைத்திருங்கள்**

### தீப்பிடித்துவிட்டது என்றால் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள்

#### சிறிய கிரீஸ் அல்லது பாத்திரம்/வாணலியில் தீ

- **எண்ணை தீப்பிடித்து எரிந்தால் ஒருபோதும் தண்ணீரை ஊற்றாதீர்கள்**
- உங்கள் கைகளைக் காத்துக்கொள்ள கணப்பு அடுப்பு கையுறைகளை அணியுங்கள்
- தீச்சுவாலையை அடக்க பாத்திரம்/வாணலியை மூடி மீது சரிக்கவும்
- பர்னரை அணைத்துவிட்டு, பாத்திரத்தின் வெப்பம் தணிந்து குளிர்ச்சியடையும் வரை மூடியை நகர்த்தவோ அல்லது அகற்றவோ வேண்டாம்
- தீச்சுவாலை இருக்கும் பாத்திரத்தை எடுக்கவோ கையில் தூக்கிச்செல்லவோ வேண்டாம்; அது உங்கள் சருமத்தை எரித்துவிடும் மற்றும் கைதவறி கீழே விட்டுவிட்டால் தீயை பரவச் செய்துவிடும்.

#### பேக்கரி அடுப்பு தீ

- ஹீட்டரை அணைத்து விட்டு கதவை மூடியபடியே வையுங்கள்
- **பேக்கரி அடுப்பு குளிர்ச்சியடைந்து தீ முற்றிலுமாக அணையும் வரை அதன் கதவை திறக்காதீர்கள்.**

#### மைக்ரோவேவ் அடுப்பு தீ

- தீச்சுவாலைகளுக்கு ஆக்ஸிஜன் வழங்கும் ஃபேன் ஐ நிறுத்த உடனடியாக மைக்ரோவேவ் அடுப்பின் மின் இணைப்பை துண்டிக்கவும்.
- **அது குளிர்ச்சியடைந்து தீ முற்றிலுமாக அணையும் வரை பேக்கரி அடுப்பு கதவை திறக்காதீர்கள்**

---

### சமையலறையில் தீப்பற்றுகிறது என்றாலே அது ஒரு அவசர நிலைதான்; 9-1-1 க்கு உடனடியாக அழைக்கவும் - தீ அணைந்துவிட்டது என நீங்கள் நினைத்தாலுமே கூட.

**ஏன்?** உள்ளபடியே, உங்களுக்குத் தெரியாமலேயே தீ, வெப்பம் மற்றும் புகை பிற பகுதிகளுக்கு பரவியிருக்கக் கூடும்.

சிறிய அளவிலான சமையலறை தீயை அணைப்பது பாதுகாப்பானது என்றால் மட்டுமே தீயை அணைக்க முயற்சிக்கவும்
**சந்தேகம் வந்தால்: வெளியேறி விடுங்கள் மற்றும் வெளியிலேயே இருந்துவிடுங்கள்! எப்போதும் 9-1-1 ஐ அழையுங்கள்**


905.458.5580
bramptonfire.com
firelife@brampton.ca
BramptonFire
@BramptonFireES


BRAMPTON

BRAMPTON FIRE EMERGENCY SERVICES